# அவுஸ்திரேலியா

# தமிழ்மொழித் தேர்வு

**Reading Time: 15 Minutes**
**Writing Time: 90 Minutes**

# வளர்நிலை 6

அரை ஆண்டுத் தேர்வு
2006

சுட்டெண் **(Index) :**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

அரையாண்டுத்தேர்வு                    தமிழ் மொழி
வகுப்பு 06                    15-7-2006

**பன்முகதேர்வு வினாக்கள்;                    பகுதி 2                    வருடம்: 06**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | வெள்ளித்திரை என்பதைப் பிரித்து எழுதினால் -----------<br>1. வெ+திரை 2. வெள்ளி+திரை 3. வெள்ளித்+திரை 4. வெள்ளி+த்திரை | 1 | 2 | 3 | 4 |
| 2 | அவர்கள் பள்ளிக்குப் -----------<br>1. போனேன் 2. போகிறாள். 3. போகிறார்கள். 4. போனான். | 1 | 2 | 3 | 4 |
| 3 | ஆலயம் தொழுவது சாலவும் ---------<br>1. நல்லது 2. கூடாது 3. நன்று. 4. தீமையானது | 1 | 2 | 3 | 4 |
| 4 | மல்லிகை மலர் இனிய --------------- உடையது.<br>1. நிறம் 2. வாசனை 3. மனம் 4. குணம் | 1 | 2 | 3 | 4 |
| 5 | அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம். பிதா என்பது<br>1.தந்தை 2. அக்கா 3. அன்னையும் 4. அப்பாவும் | 1 | 2 | 3 | 4 |
| 6 | புதிய என்பதன் எதிர்ச்சொல் ---------------.<br>1. விருப்பு 2. பழைய 3. பெரிய 4. செயற்கை | 1 | 2 | 3 | 4 |
| 7 | அப்பாவின் எதிர்பால் சொல் ---------------.<br>1. மனைவி 2. அம்மா 3. அரசி 4. நடிகை | 1 | 2 | 3 | 4 |
| 8 | நான் பாட்டுப் பாடுகிறேன். நீயும் பாட்டுப்<br>1. பாடுகிறாய் 2. பாடுகிறோம். 3. பாடுவேன் 4. பாடுகிறான். | 1 | 2 | 3 | 4 |
| 9. | விழா என்பதன் ஒத்த சொல் -----------.<br>1. கொண்டாட்டம் 2. வணக்கம் 3. திருமணம் 4. கலைவிழா | 1 | 2 | 3 | 4 |
| 10. | சகோதரன் என்பது ---------------.<br>1. மாதா 2. கடவுள் 3. தம்பி 4. தங்கை | 1 | 2 | 3 | 4 |
| 11. | புதுமைப்பெண்ணாக புறப்படவேண்டும் என்று கூறியவர் -------.<br>1. வள்ளுவர் 2. பாரதியார் 3. ஔவையார் 4. ஆதித்தனார் | 1 | 2 | 3 | 4 |
| 12. | இளமையில் ---------- சிலையில் எழுத்து<br>1. அழகு 2. கல்வி 3. எழுத்தும் 4. அழகு | 1 | 2 | 3 | 4 |
| 13. | இலக்கம் என்பதன் ஒத்த சொல் ------------.<br>1. எண் 2. வானம் 3. முகில் 4. எண்கள் | 1 | 2 | 3 | 4 |
| 14. | பிறப்பு இதன் எதிர்ச்சொல் -------------.<br>1. மறைவு 2. உதிப்பு 3. இறப்பு 4. தாழ்வு | 1 | 2 | 3 | 4 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 15 | மிகவும் உயரமாக வளரும் மரம் -------------.<br>1.தென்னை 2. வாழை 3. பூமரம் 4. மாமரம் | 1 | 2 | 3 | 4 |
| 16 | ------------ புத்தகம் படிக்கிறோம்.<br>1. நாங்கள் 2. நான் 3. நாம் 4. அவர்கள் | 1 | 2 | 3 | 4 |
| 17. | அந்தப் பந்து கீழே ------------<br>1. விழுந்து 2. விழுந்தது 3. விழுந்த. 4. விழு. | 1 | 2 | 3 | 4 |
| 18. | வருடம் தொடங்குவது எந்த மாதத்தில்?<br>1. தை 2. மார்கழி 3. மாசி 4. ஆடி | 1 | 2 | 3 | 4 |
| 19. | மாணவனின் எதிர்ப்பால் சொல் -------------.<br>1. தலைவி 2. சகோதரி 3. மாணவி 4. பாடகி | 1 | 2 | 3 | 4 |
| 20. | பறவை உயர எழுந்து ------------- பறந்தது.<br>1. தரையில் 2. நீரில் 3. வானத்தில் 4. காற்றில் | 1 | 2 | 3 | 4 |
| 21 | ஆடிப்பூரம் திருவிழா வரும் மாதம் -----------.<br>1. தை 2. ஆடி 3. ஆவணி 4. மார்கழி | 1 | 2 | 3 | 4 |
| 22 | கொக்கு பொதுவாக நிற்கும் இடம் ---------------.<br>1.வீட்டுக்கூரை 2.கடற்கரை 3.மரம் 4. வீடு | 1 | 2 | 3 | 4 |
| 23 | அவன் வேலைகளை -----------------<br>1. வந்தன. 2. செய்தோம். 3. செய்தன 4. செய்தான். | 1 | 2 | 3 | 4 |
| 24 | நகரம் என்பது ---------------.<br>1. கிராமம் 2. நாடு 3. பட்டணம் 4. விட | 1 | 2 | 3 | 4 |
| 25 | இருபத்திரண்டின் அடுத்த எண் ----------------.<br>1. **30** 2. **20** 3. **23** 4. **22** | 1 | 2 | 3 | 4 |
| 26 | வினாவிற்கு ஏற்ற --------- எழுது<br>1. கேள்வி 2. விடை 3. பேச்சு 4. பதில் | 1 | 2 | 3 | 4 |
| 27 | நல்ல நூல்களை படி. கதைகளுக்கு ஒத்த சொல் ------------.<br>1.நூல்கள் 2. பாடங்களை 3. புத்தகங்களை 4. நாவல்களை | 1 | 2 | 3 | 4 |
| 28 | நாங்கள் நாளை பாடசாலைக்கு ---------------<br>1. வந்தோம் 2. வருகிறோம் 3. வருவோம் 4. வருவேன் | 1 | 2 | 3 | 4 |
| 29 | ------------------ இன்று வருகிறார்.<br>1. அது 2. அவை 3. அவர் 4. அவன் | 1 | 2 | 3 | 4 |
| 30 | ---------- கல்<br>1. இம்மையில் 2. இளமையில் 3. வறுமையில் 4.முதுமையில் | 1 | 2 | 3 | 4 |

(30 புள்ளிகள்)

வினாக்கள் வருடம்: 06

1.பின்வரும் பந்தியை வாசித்து, கீழ்வரும் கேள்விகளுக்குப் பதில் எழுதுக.

அன்று ஞாயிற்றுக் கிழமை. செல்வனும் அவனது அண்ணனும் மீன் பிடிக்கச் சென்றார்கள். அப்பொழுது பிற்பகல் மணி இரண்டு இருக்கும். கடுமையாக வெயில் அடித்தது. செல்வன் தொப்பியும் கறுப்புக் கண்ணாடியும் அணிந்திருந்தான். அவன் தன் அண்ணனைப் பார்த்து இன்று வெயிலைத் தாங்க முடியவில்லை என்றான். அதற்கு அவன் அண்ணன் நல்லவேளை சூரியன் நாம் வாழும் பூமியிலிருந்து அதிகத் தொலைவில் இருக்கின்றது. அதனால் சூடு நம்மை அதிகம் பாதிப்பதில்லை. சூரியனிடமிருந்து நமக்கு வெளிச்சமும் கிடைக்கின்றது என்று சொன்னார். அப்போது செல்வன் சந்திரனுக்கு செல்லும் மனிதர் ஏன் சூரியனுக்கு செல்வதில்லை என்று கேட்டான். அதற்கு அண்ணன் சூரியனை நாம் நெருங்க முடியாது அது நெருப்புப் பந்து போல் இருக்கும். சுற்றிக் கொண்டிருக்கும் பூமியில் சூரியனின் ஒளி படுவதால் இரவு பகல் உண்டாகிறது. சூரியனின் வெளிச்சமும் வெப்பமும் செடி கொடிகள் வளர உதவுகின்றன. சூரியனுக்கு கதிரவன், ஞாயிறு எனவும் பெயர்கள் உண்டு.

சகோதர்கள் இருவரும் எங்கு சென்றார்கள்?

___

செல்வன் ஏன் தொப்பியும் கறுத்த கண்ணாடியும் அணிந்திருந்தான்?

___

சூரியன் எதைப்போல் இருக்கும்?

___

சூரியனிடமிருந்து நமக்கு என்ன என்ன கிடைக்கின்றன?

___

சூரியனின் மறுபெயர்கள் எவை?

___

(10 புள்ளிகள்)

பொது இடங்களை எப்படி சுத்தமாக வைத்திருக்கலாம் என உமது கருத்துக்களை எழுதுக. (60 - 70 சொற்கள்)

(10 புள்ளிகள்)

3. மாறிக்கிடக்கும் சொற்களைக் கருத்தமைய மாற்றி சரியான வசனத்தில் அமைக்க.

வீட்டில் - பக்கத்து - ஒரு - நடந்தது - திருமணம்

வந்திருந்தார்கள் - பலர் - அந்த - திருமணத்திற்கு

முழுவதும் - அலங்கரித்து - வீடு - இருந்தார்கள்

ஓடி - விளையாடிக் - சிறுவர்கள் - கொண்டிருந்தார்கள்.

_______________________________________________

நிறைய - வீட்டின் - வாகனங்கள் - நிறுத்தப்பட்டிருந்தன - முன்னால்

_______________________________________________

(10 புள்ளிகள்)

4. கீறிட்ட இடத்தில் பொருத்தமான பெயர்ச் சொல்லை வைத்து எழுதுக.

நீ எழுதிய ------------ சிறப்பாக உள்ளது.

நான் வாசித்த -------------- முடிவு நன்றாக இருந்தது.

அவர்கள் ----------- கேட்டு மகிழ்ந்தார்கள்.

அவன் வரைந்த ------------ அனைவரும் ரசித்தனர்.

நான் பார்த்த -------- என்னைத் திகில் கொள்ள வைத்தது.

அந்த --------- தீப்பற்றியதால் எரிந்து சாம்பலாயிற்று.

அந்த ----------- நீண்ட நேரம் விளையாடிவிட்டு எழுந்தது.

--------------- மிகவும் மெதுவாக ஊர்ந்து சென்றது.

உடைந்த ---------- உன்னால் சேர்த்து ஒட்ட முடியுமா?

அவன் தன் ----------- நன்றி கூறி விடைபெற்றான்.

(10 புள்ளிகள்)

5. பின்வரும் பொதுஅறிவு வினாக்களுக்கு விடை தருக.

அண்மையில் ஏற்பட்ட நில நடுக்கத்தினால் பாதிக்கப்பட்ட நாடு எது?

_______________________________________________

உலக உதைபந்தாட்டத்தில் பங்கு பற்றும் நாடுகள் எத்தனை?

_______________________________________________

ஈராக் நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்ட தலைவரின் பெயர் என்ன?

_______________________________________________

இலக்கம் ஐம்பதையும், இலக்கம் முப்பதையும் கூட்டினால் வரும் எண் என்ன?

________________________________

கரும்புள்ளி பிரித்தெழுதுக.

________________________________

இந்தியாவின் தலைநகரம் எது?

________________________________

உலகில் மக்கள் தொகை கூடிய நாடு எது.?

________________________________

2006ம் உலக உதைபந்தாட்டம் எங்கு நடைபெற்றது?

________________________________

இங்கிலாந்தின் பிரதம மந்திரியின் பெயர் என்ன?

________________________________

வஞ்சனைகள் செய்வாரோடு இணங்க வேண்டாம் என்று கூறிய புலவர் யார்?

________________________________

(10 புள்ளிகள்)

6. தென்ஆபிரிக்காவிற்கு சுற்றுலா செல்வதற்கு ஒரு விளம்பரம் எழுதித் தரும்படி உம்மை கேட்கிறார்கள். அதனை எப்படி தயார் செய்வீர்? போகும் இடங்கள் சண்சிட்டி, கேப்டவுன், டேர்பன், குருகர் சபாரி, ஜோனார்ஸ்பேர்க்.

(10 புள்ளிகள்)

7. பொழுது என்னும் சொல்லை சேர்த்து இருவசனங்களை ஒரு வசனமாக்குக

உ.ம்: நான் பள்ளி சென்றேன். மழை பெய்யத் தொடங்கியது
நான் பள்ளிக்கு சென்று கொண்டிருந்த பொழுது மழை பெய்ய தொடங்கியது

நான் பஸ்நிலையத்தில் நின்று கொண்டிருந்தேன். என் நண்பர் அருகில் வந்து நின்றார்.

அவர் என்னுடன் பேசினார். ஒரு பஸ்வண்டி வந்தது.

நான் பஸ் வண்டியுள் ஏறினேன். அவரும் வண்டியுள் ஏறினார்.

நான் ஒரு இருக்கையில் அமர்ந்தேன். அவரும் என் அருகில் அமர்ந்தார்.

நான் வெளியே எட்டிப் பார்த்தேன். ஒரு வயதானவர் கீழே நின்றார்.

(10 புள்ளிகள்)